செ.வெ.எண். 50 நாள்: 28.05.2016

## பத்திரிக்கைச்செய்தி

## மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை ஆய்வுக் கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் இன்று (28.05.2016) நடைபெற்றது





இக்கூட்டத்தில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பான திட்டம் ஒகனேக்கல் கூட்டு குடிநீர் திட்டம் இத்திட்டத்தின் மூலம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி பகுதிகளிலுள்ள மக்கள் அனைவருக்கும் ஒகேனக்கல் குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் ஒரு சில கிராமங்களுக்கு ஒகேனக்கல் குடிநீர் வருவதில்லை என்ற நிலையை போக்குவதற்கு அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஒகேனக்கல் குடிநீர் அனைத்து பகுதி மக்களுக்கும் சென்றடையும் வகையில் உடனடியாக தீர்வு காண வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து உணவு பொருள் வழங்கல் துறை பொது விநியோகதிட்டத்தின் மூலம் இதுவரை வழங்கப்பட்ட புதிய குடும்ப அட்டைகள் எண்ணிக்கையையும், புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையையும் கேட்டறிந்து நகல் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்கள் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் பாலக்கோடு ஒன்றியத்தை சேர்ந்த சிக்கமாரண்டஅள்ளி ஊராட்சி ”ஏ” தரம் பெற்று சிறந்த ஊராட்சிக்கான பாராட்டு சான்றிதழ்களையும், அத்திமுட்லு, தண்டுகாரணஅள்ளி, கெண்டையஅள்ளி, பேவுஅள்ளி, சிக்கதோரணபெட்டம் ஊராட்சிகள் ”பி” தரம் பெற்று சிறந்த ஊராட்சிக்கான ஊக்க நிதி தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் 5 ஊராட்சிகளுக்கு 15 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கினார் மேலும் ஏ.மல்லாபுரம், புலிகரை, ஜெர்தலாவ், செட்டிஅள்ளி ஊராட்சிகளுக்கு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்கான பாராட்டு சான்றிதழ்களையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கி தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த புதுவாழ்வு திட்டம் மக்களின் தேவைகளை மக்களே கண்டறிந்து திட்டமிட்டு, கண்காணித்து, திட்ட நிதியினை மக்களே செலவழித்து மக்களின் முன்னேற்றத்திற்காக வறுமையை போக்கி வளமான சமூதாயத்தை உருவாக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்தில் 2011-ம் ஆண்டு முதல் நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, மொரப்பூர், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 6 ஒன்றியங்களுக்குட்பட்ட 193 கிராம ஊராட்சிகளில் 222 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்கள் அதிக வருமானம் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் அனைத்து உதவிகளும் புது வாழ்வு திட்டத்தின் மூலம் மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா

அவர்களின் இலட்சியமாகும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் அரூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ஆர்.முருகன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.தொ.மு. நாகராசன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ.சங்கர், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை,திரு. ஸ்ரீதர், கோட்டாட்சியர்கள் திருமதி.கவிதா, திரு.ராமமூர்த்தி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் திரு.மு.கார்த்திக், உகனேக்கல் கூட்டு குடிநீர் திட்டம் நிர்வாகப்பொறியாளர் திரு. உதயசிங், உதவிஇயக்குநர் ஊராட்சிகள் திரு.பழனிச்சாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி சித்ரா புதுவாழ்வு மாவட்ட திட்ட மேலாளர் திரு.நாராயணன், உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தருமபுரி**